


அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் அர.சக்கரபாணி தொகுதியில் 234/77 ஆய்வுத் திட்டத்தின் 184 ஆவது ஆய்வை மேற்கொண்டார். நேருஜி அரசு மேல்நிலைப் பள்ளியில் விரிவான ஆய்வு மேற்கொண்டு, நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கழிவறை கட்டடங்களையும், வகுப்பறைகளையும் பார்வையிட்டார். தொழிற்பயிற்சி பிரிவு மாணவர்களையும், போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களையும் சந்தித்து வாழ்த்துகள் தெரிவித்தார். முன்னதாக வேடச்சந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் தொகுதியில் அமைந்துள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியிலும் ஆய்வு மேற்கொண்டார்.



மகாகவி பாரதியார் அவர்களின் நினைவு நாளான மகாகவி நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (11.09.2024) சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு. மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், வி.ஜி.பி உலகத்தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### பெட்ரோல் - டீசல் விலை குறையுமா? நான்கு மாநிலங்களுக்கு

# சட்டசபைத் தேர்தல் வர இருப்பதால் விலைக் குறையுமென மக்கள் நம்பிக்கை!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, செப். 12 -

நான்கு மாநிலங்களுக்கு சட்டசபை தேர்தல் வர இருப்பதால் அதன் நெருக் கத்தில் பெட்ரோல் - டீசல் விலை குறையும் என மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாக ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளது.



தலையங்கம்

தினத்தந்தி

11.9.2024 (புதன்கிழமை)

பெட்ரோல் - டீசல் விலை குறையுமா?

அது வருமாறு:

அனைவரது வாழ்விலும் போக்குவரத்து என்பது இன்றியமையாததாகிவிட்டது. போக்குவரத்து வாகனங்களுக்கு முக்கிய எரிபொருளான பெட்ரோல்டீசல் என்பது மிக அத்தியாவசியமான ஒன்றாகிவிட்டது. மாத பட்ஜெட்டில் பெட்ரோல் - டீசல் வாங்குவதற்கே ஒரு பெரிய தொகையை ஒதுக்க வேண்டியுள்ளது. சரக்கு வாகனங்கள் பயன்பாட்டுக்கான டீசல் விலை உயர்வை பொறுத்தே அனைத்து பொருட்களின் விலையும் நிர்ண யிக்கப்படுகிறது. பஸ் போக்குவரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்தியாவில் பெட்ரோல்டீசலின் மூலப்பொருளான கச்சா எண்ணெய்க்காக வெளிநாடுகளைத்தான் நம்பியிருக்கிறோம். காரணம், இந்தியாவில் எண்ணெய் வளம் இல்லை. நமது தேவைக்காக ரஷியா, ஈராக், அமெரிக்கா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள் உள்ளிட்டவைகளைத்தான் நம்பியிருக்கிறோம். 40 சதவீதம் அளவுக்கு ரஷியாவில் இருந்துதான் கச்சா எண்ணெயை வாங்கிக் கொண்டிருக்கிறோம். கடந்த ஜூலை மாதம் மட்டும் 46 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெயை வாங்கி இருக்கிறோம். அது ஆகஸ்டு மாதத்தில் நமது எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளில் பராமரிப்பு பணிகள் நடந்து வந்த காரணத்தால், இந்த இறக்குமதி சற்று குறைந்து இருக்கிறது. அதே சமயத்தில் ஈராக், அமெரிக்கா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவது சற்று குறைந்து இருக்கிறது.

ரஷியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் விலை மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விலையைவிட மிக குறைவு. ஏனெனில் ரஷியாஉக்ரைன் போர் காரணமாக மேற்கத்திய நாடுகள் ரஷியாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை தற்காலிகமாக நிறுத்திவைத்து இருக்கின்றன. பொதுவாக, நாம் இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெயின் விலையை வைத்துத்தான் இந்தியாவில் பெட்ரோல்டீசல் விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதுவரை அந்த நடைமுறைதான் பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால், இப்போது கச்சா எண்ணெய் விலை நாளுக்கு நாள் குறைந்து வந்தாலும், இந்தியாவில் பெட்ரோல்டீசல் விலை குறைக்கப்படவில்லை. ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை அதிகபட்சமாக 2008ம் ஆண்டு 147 அமெரிக்க டாலராக இருந்த நேரத்தில், சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.55 ஆகத்தான் இருந்தது. டீசல் விலை ஒரு லிட்டருக்கு ரூ.35 ஆகத்தான் இருந்தது.

இப்போது கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய்க்கு 68.56 டாலர் என்ற அளவில்தான் இருக்கிறது. ஆனால், பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.100.75 ஆகவும், டீசல் விலை ஒரு லிட்டருக்கு ரூ.92.34 ஆகவும் இருக்கிறது. இப்போது இருக்கும் பெட்ரோல்டீசல் விலை கடந்த மார்ச் மாதம் 28ந்தேதி முதல் எந்தவித மாற்றமும் இல்லாமல் இருக்கிறது. மார்ச் 28 ந்தேதி கச்சா எண்ணெய் விலை 83.69 அமெரிக்க டாலராக இருந்தது. கச்சா எண்ணெயின் சர்வதேச விலை குறைந்தபோதும், இந்தியாவில் பெட்ரோல்டீசல் விலை குறையவில்லை. தேர்தல் வந்தால் மட்டும் குறைக்கப்பட்டுவிடுகிறது.

நாடாளுமன்ற தேர்தலையொட்டி மார்ச் மாதம் 28ந்தேதிக்கு முன் பெட்ரோல்டீரல் இரண்டுக்குமே லிட்ட ருக்கு ரூ.2 குறைக்கப்பட்டது. இப்போது, கச்சா எண்ணெய் விலை தான் இவ்வளவு குறைந்துவிட்டதே இன்னும் ஏன் பெட்ரோல் டீசல் விலையை குறைக்க தயக்கம் என்பதுதான் மக்கள் கேட்கும் கேள்வி. ஆனால், 4 மாநிலங்களுக்கு சட்டசபை தேர்தல் வர இருப்பதால் அதன் நெருக்கத்தில் விலை குறையும் என்பது மக்களின் நம்பிக்கை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு உர விற்பனை: இணை இடுபொருட்களை வாங்க

# உர விற்பனையாளர்கள் கட்டாயப்படுத்தக் கூடாது!

## வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உத்தரவு!

**சென்னை, செப்.12–**

**விவசாயிகளுக்கு உர விற்பனை செய்யும் போது இணை இடுபொருட்களை வாங்க உர விற்பனையா ளர்கள் மற்றும் இடுபொருள் விற்பனை யாளர்கள் கட்டாயப்படுத்தக் கூடாது என வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் உத்தரவிட்டுள்ளார்.**



அதன் விபரம் வருமாறு:

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் தலைமையில் நேற்று முன்தினம் (10.09.2024), தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் தற்போது அனைத்து பயிர்களுக்கும் தேவையான உரத் தேவை இருப்பு மற்றும் விற்பனை குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுக்கூட்டத்தின் போது யூரியா, டிஏபி, பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் மற்றும் இதர உரங்களின் தேவை மற்றும் சம்பா பருவத்திற்குத் தேவையான கையிருப்பு குறித்து ஆய்வு செய்யப்பட்டு தற்போதைய உர இருப்பு தேவையைவிட அதிகமாக அனைத்து மாவட்டங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டது.

போதுமான உர இருப்பு இருந்த போதிலும், வேளாண் இணை இடுபொருட்களை, விற்பனையாளர்கள் கூடுதலாக விவசாயிகளிடம் வாங்குவதற்குக் கட்டாயப்படுத்துவது தொடர்பாக விவசாயிகளிடமிருந்து கோரிக்கை பெறப்பட்டது. விவசாயிகளுக்கு உர விற்பனை செய்யும்போது இணை இடுபொருட்களை வாங்க கட்டாயப்படுத்தக் கூடாது என கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

அவ்வாறு விவசாயிகள் விரும்பாத இடுபொருள்களை வாங்க வலியுறுத்தும் உர விற்பனையாளர்கள், இடுபொருள் விற்பனை யாளர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை பாயும் என எச்சரிக்கப்பட்டது.

இதனை மீறும் உர விற்பனையாளர்கள் மற்றும் வேளாண் இடுபொருள் விற்பனை மையங்கள் மீது உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985இன்படி, கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவும், தேவைப்படும் நிகழ்வில் உரிமத்தை ரத்து செய்யவும் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் உத்தரவிட்டார்.

வேளாண்மை உதவி அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கு உரப்பயன்பாடு குறித்தும் மண்ணின் வளத்தை பாதுகாத்திடவும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் போதிய பயிற்சி அளிக்க வேண்டும்.

மேலும், மாவட்ட அலுவலர்கள் பருவத்திற்குத் தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி கிடைக்கவும், தரமான உரங்கள் வினியோகம் செய்வதையும் உறுதி செய்ய வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர், செல்வி அபூர்வா, வேளாண்மைத் துறை இயக்குநர், பி.முருகேஷ், உர நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


### மதுரை மாநகர் மாவட்டத்தில்

# பகுதி வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



**மதுரை மாநகர் மாவட்டத்தில் பகுதி வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறுகிறது.**

| நாள்/நேரம் | இடம் | பகுதி | பகுதி செயலாளர் | சிறப்புரை |
|---|---|---|---|---|
| 12-09-2024 (வியாழக்கிழமை) (மாலை 6.00 மணி) | ஸ்ரீ மீனாட்சி மஹால், அய்யனார் கோவில் 5வது தெரு, செல்லூர் | செல்லூர் கோரிப்பாளையம் | T.A.குரும்பன் G.ராதாகிருஷ்ணன் | திரு.பொன்.முத்துராமலிங்கம் திரு.V.வேலுச்சாமி |
| 12-09-2024 (மாலை 7.30 மணி) | TWINS திருமண மஹால், அண்ணாநகர். | கே.கே.நகர் அண்ணாநகர் கோ.புதூர் | B.அறிவுநிதி S.சித்திக் N.M.புண்ணியமூர்த்தி | திரு.பெ.குழந்தைவேலு |
| 12-09-2024 (வியாழக்கிழமை) (மாலை 7.00 மணி) | சந்திர குழந்தை திருமண மஹால், தெப்பக்குளம். | நெல்பேட்டை காமராஜபுரம் | அ.அன்வர் உசேன் R.M.முத்து | திரு. மா.ஜெயராம் M.C |
| 13-09-2024 (வெள்ளி கிழமை) (மாலை 6.00 மணி) | சமுதாய கூட திருமண மஹால், கலைஞர் பூங்கா அருகில், பழங்காநத்தம். | சோலையழகுபுரம் ஜீவா நகர் பழங்காநத்தம் | R.அன்பழகன் கு.காவேரி M.C S.V.சுதன் M.C | திரு. K.தனசெல்வம் |
| 13-09-2024 (மாலை 7.00 மணி) | பாண்டியன் துர்க்கை மஹால், சொக்கலிங்க நகர். | சம்மட்டிபுரம் பெத்தானியாபுரம் | K.தவமணி | திரு. மா.ஒச்சுபாலு |
| 13-09-2024 (மாலை 7.00 மணி) | பாண்டிய வேளாளர் திருமண மண்டபம், தெற்கு வெளி வீதி | வில்லாபுரம் தெற்குவாசல் | போஸ் முத்தையா ப.ரமேஷ் குமார் (எ) ஜீவன் | திரு.ஜெ.மூவேந்திரன் M.C |
| 13-09-2024 (மாலை 6.30 மணி) | S.M.P. திருமண மஹால், பரவை. | திருப்பரங்குன்றம் வடக்கு ஒன்றியம் பரவை பேரூர் | R.K.ஜெயராமன் K.S. ராஜாமணி | திரு. சி.சின்னம்மாள் |

**இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் மற்றும் பொது உறுப்பினர்கள் அனைவரும் அந்தந்த பகுதிகளில் நடைபெறும் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.**

**கோ.தளபதி எம்.எல்.ஏ.**
செயலாளர்
மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.



